## செய்தி வெளியீடு

**RVHS and TSH வைத்தியசாலைகள் இணைவதற்கான மாற்றுநிலைக் கூட்டுக் குழு ஒன்றை அமைக்கின்றன**

ஜனவரி 21, 2014 - றூஷ்வலி சுகாதார சேவைத்திட்ட அமைப்பும்(RVHS) ஸ்காபரோ வைத்தியசாலையும்(TSH), தமது முன்மொழியப்பட்ட இணைப்பில் தொடர்ந்து அலுவல்களைக் கவனிக்க மாற்றுநிலைக் கூட்டுக் குழு (JTC) ஒன்றை அமைத்துள்ளமைபற்றி அறிவித்துள்ளன.

RVHS மற்றும் TSH வைத்தியசாலைகளின் தலைவர்களின் இணைத் தலைமையில் இயங்கும் இந்த மாற்றுநிலைக் கூட்டுக் குழுவில் இரு வைத்தியசாலைகளினதும் இயக்குநர் சபை உறுப்பினர்கள், அவற்றின் பிரதான நிறைவேற்று அதிகாரிகள், மருத்துவத் தலைவர்கள், இரு வைத்தியசாலைகளினதும் மருத்துவ உத்தியோகத்தர் சங்கத்தின் தலைவர்கள் ஆகியோர் அங்கம் வகிக்கின்றனர். இவர்களுடன் மையக் கிழக்கு LHIN (Central East LHIN) பிரதான நிறைவேற்று அதிகாரியும் உறுப்பினராக இருப்பார்.

JTC தனது நடவடிக்கைகளை மக்களுக்குத் தெரியப்படுத்துவதைக் கொள்கையாகக் கொண்டுள்ளது. அதன் பணிகள் பற்றிய அனைத்துத் தகவல்களையும் www.leadingforpatients.ca. என்னும் இணையதளத்தில் காணலாம்.

’நவம்பரில் இரு வைத்தியசாலைகளினதும் சபைகள் அங்கீகரிக்க எடுத்துக்கொண்ட தீர்மானத்தைத் தொடர்ந்து, இணைவதன் அடுத்த கட்டத்துக்கு மாற்றுநிலைக் கூட்டுக் குழு எம்மை அழைத்துச் செல்லும். ஸ்காபரோவிலும் மேற்கு டூறாம் பகுதிகளிலும்(ஏஜாக்ஸ், பிக்கரிங், விற்பி) உள்ள மக்களின் மருத்துவத் தேவைகள் அதிகரித்துவருகின்றன. அவற்றை நிறைவேற்றும் வகையில் ஸ்காபரோ வைத்தியசாலைத் தோழருடன் நாம் தொடர்ந்து பணியாற்றத் தயாராக உள்ளோம்’ என்று RVHS இயக்குநர் சபைத் தலைவர் யோன் வைட்மன் கூறினார்.

’இரு வைத்தியசாலைக் கூட்டுத்தாபனங்களிலும் சிறந்த தலைமைத்துவம் இருக்கிறது. இவர்கள் செய்த பணிகளைத் தொடர்ந்து கடந்த ஆண்டுக் கோடையிலும் இலையுதிர் பருவத்திலும் எம்மை வழிநடத்திய இணைப்புத் தலைமையில் இரு சபைகள், உத்தியோகத்தர், வைத்தியர், சமூக உறுப்பினர் என்போர் ஆற்றிய பணிகளைத் தொடர்ந்து வளர்ப்போம். வளர்ந்துவரும் எமது சமூகத்துக்கு சிறந்த சேவையை ஆற்ற நாம் தயாராகவே இருக்கின்றோம்’ என்று TSH இயக்குநர் சபைத் தலைவர் ஸ்ரிவின் சிமித் அவர்கள் தெரிவித்தார்கள்.

மாற்றுநிலைக் கூட்டுக் குழுவின் பணிகள் பின்வருவற்றில் கவனம் செலுத்தும்:

- வைத்தியசாலைகளின் தற்போதைய நிலைமையை விளங்கிக் கொள்ளுதல்;
- இணைந்து செயற்படும் முறையைத் தொடர்ந்து நடத்துவதற்குத் தடையாக இருப்பனவற்றை இனங்காணல்;
- நிருவாக அமைப்புக்கு மாற்று முறைகளை யோசித்தல்;
- ஆக்கச் சிந்தனைகளுக்கு இயக்குநர் சபைகள், பங்குதாரர், தெரிவு செய்யப்பெற்ற அலுவலர்கள் உட்படச் சமூகத்தவர் ஆகியோரை ஈடுபடுத்தல்;
- ஆபத்துக்களையும் அவற்றைத் தீர்க்கும் வழிவகைகளையும் இனங்காணல்;
- தொடர்பாக்கம் மற்றும் சமூகத்தை ஈடுபடுத்தும் உபாயங்களை அமுல்படுத்தல்;

மாற்றுநிலைக் கூட்டுக் குழு RVHS, TSH ஆகியவற்றின் இயக்குநர் சபைகளுக்கே அறிக்கையிடுகின்றது. அதனால் அதற்கு இணையும் திட்டத்தை அங்கீகரிக்கும் அதிகாரம் கிடையாது. அது:

- அமைப்பின் சேவைகள், நிருவாகம், முகாமைத்துவம், செயற்பாடுகள் பற்றிய தகவல்களைப் பகிர்ந்துகொள்ளும்;
- திட்டங்கள் மற்றும் செயற்பாடுகளைத் தங்கள் அமைப்புகளின் சார்பில் சிபார்சு செய்யும்;
- தேவைக்கேற்ப இணையும் முயற்சிகளுக்குத் தொடர்பான குறிப்பிட்ட பிரச்சனைகளைக் கண்டறிவதற்கு உப குழுக்களை நியமிக்கும்;

அடுத்த கட்டம் இன்னும் 60-90 நாட்களுக்கிடையில் முடிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது. அந்நாட்களில் இரு வைத்தியசாலைகளினதும் சபைகள் மீளவும் கூட்டப்பெற்று இணைப்பு முயற்சிகள் தொடர்வதுபற்றி இறுதி முடிவு எடுக்கப்படும். அவ்வேளை இரு சபைகளும் செயல்திட்ட ஊக்கம், ஆர்வலர் பங்களிப்பு, பெறப்பட்ட நிதியுதவி, முதலீட்டுத் திட்டத்துக்கான நன்கொடைகள் பற்றி ஆலோசிக்கும்.
வைத்தியசாலைகள் இணைவதைப் பரிந்துரைக்கும் பட்சத்தில், மைய கிழக்கு LHIN சபையும் சுகாதாரம் மற்றும் நெடுநாள் பராமரிப்பு அமைச்சரும் இணையும் விடயத்தைப் பரிசீலனை செய்வர்.
இரு வைத்தியசாலைகளும் 2013 மார்ச் 27ல் தொடங்கப்பெற்ற இணைப்பு நடவடிக்கைகள் குறித்து சம்பந்தப்பட்ட அனைவருக்கும் அறிவித்து அவர்களைத் தொடர்ந்து இம்முயற்சியில் ஈடுபடுத்துவதற்குத் தம்மை அர்ப்பணித்துள்ளன.

**Membership of the Joint Transition Committee (JTC)**
The Joint Transition Committee members are:
Stephen Smith (JTC Co-Chair) - TSH Board Chair
Lyn McDonell - TSH Board Director
Valerie Carter - TSH Board Director
Janet Dalicandro - TSH Board Director
Christian Buhagiar - TSH Board Director
Robert Biron - TSH President and CEO
Dr. Tom Chan - TSH Chief of Staff
Dr. Tim Sproule - TSH Medical Staff Association Representative
Dr. Dov Soberman - TSH Medical Staff Association Representative

Joan Wideman (JTC Co-Chair) - RVHS Board Chair
Jay Kaufman - RVHS Board Director
Fred Clifford - RVHS Board Director
Doug Melville - RVHS Board Director
Graeme McKay - RVHS Board Director
Rik Ganderton - RVHS President and CEO
Dr. Naresh Mohan - RVHS Chief of Staff
Dr. Henry Huang - RVHS Medical Staff Society Representative
Dr. Amir Janmohamed - RVHS Medical Staff Society Representative

Deborah Hammons - Central East LHIN CEO (non-voting)
அர்ப்பணிப்புகள்

இணைவது தொடர்பாக வைத்தியசாலைகள் பின்வரும் அர்ப்பணிப்புகளைக் கூட்டாகச் செய்திருக்கின்றன:

- நான்கு வைத்தியசாலை வளாகங்களும் திறந்தவண்ணம் இருக்கும். அவை இயங்கத் தக்கவையாகவும் பயன்படத் தக்கவையாகவும் இருப்பதோடு ஸ்காபரோ மற்றும் மேற்கு டூறாம் பகுதிகளுக்கான வைத்திய முறையின் இன்றியமையாத அங்கமாகவும் விளங்குதல் வேண்டும்;
- நான்கு அவசரகாலப் பிரிவுகளும் திறந்திருக்கும்;
- றூஷ்வலி ஏஜாக்ஸ் மற்றும் பிக்கரிங் வளாகங்கள் தற்போது வழங்கப்பட்டுவரும் நோயாளர் கவனிப்புச் சேவைகள் இணைவது தொடர்பான நடவடிக்கைகளால் பாதிக்கப்படாது தொடர்ந்தும் வழங்கப்படும்;
- நான்கு வைத்தியசாலைகளும் சுகாதார முறை மாற்றங்கள் நடைபெறும் காலத்திலும் தொடர்ந்து உயர்தரமானதும் பாதுகாப்பானதுமான சேவைகளை வழங்கும்.

பொது விபரம்
இணைக்கப்பட்ட RVHS-TSH அதிக வேலைப்பாடுகளைக் கொண்டிருப்பதோடு ஒன்ராறியோவில் நல்ல தாக்கத்தையும் உண்டுபண்ணக்கூடியதாக இருக்கும். அது -

- அன்றாட அறுவைச் சிகிச்சையில் முதலாவதாக விளங்கும்:75,000(ஓர் ஆண்டுக்கு)
- அவசர வருகைகளில் இரண்டாவதாக இருக்கும்: 235,000
- கடும் நோயாளரை வேறுபடுத்தலில் இரண்டாவதாக இருக்கும்: 57,000
- தீவிர கவனிப்பு நாள்கள் (25,000), நடமாடும் கவனிப்பு (728,000), சராசரி கட்டில் உத்தியோகத்தர் (1,046) ஆகிய சேவைகளில் முதற் 10க்குள் இருக்கும்.
- மனநல வைத்தியம் உள்ளக நோயாளர் நாள்கள் (32,000), குணப்படுத்தல் (18,000), சிக்கலான தொடர் பராமரிப்பு (26,000) ஆகிய சேவைகளில் முதல் 25க்குள் இருக்கும்.



றூஷ்வலி சுகாதார சேவைத்திட்ட அமைப்பு (RVHS) ஓர் அதிசிறந்த தீவிர கவனிப்புச் சமூக வைத்தியசாலையாகும். 24/7/365 அவசர சேவை, மகப்பேற்று மருத்துவம், குழந்தை மருத்துவம், அறுவைச் சிகிச்சை, மனநல வைத்தியம், பிராந்திய இருதய வைத்தியம் போன்ற சேவைகளை உள்ளடக்கிய பல திட்டங்களை அது கொண்டிருக்கும்.
றூஷ்வலி வைத்தியசாலை இரண்டு சமூக வைத்திய வளாகங்களான ஸ்காபரோ சென்ரினறி வைத்தியசாலை, மேற்கு டூறாமில் உள்ள ஏஜாக்ஸ் மற்றும் பிக்கரிங்கில் உள்ள வைத்தியசாலைகள் உள்ளிட்ட பல சுகாதார நிலையங்களைக் கொண்டுள்ளது.

கனடாவில் அதிகம் பன்முகப்பட்ட மக்கள் வாழும் பகுதி ஒன்றில் அமைந்துள்ள ஸ்காபரோ வைத்தியசாலை(TSH) தனது இரண்டு வளாகங்கள் (பேச்மவுண்ட் வளாகம்/ பொது வளாகம்) வாயிலாகவும் அவற்றைச் சூழ்ந்துள்ள ஆறு கிளை நிலையங்கள் வாயிலாகவும் நோயாளர் முதன்மைசார் கருணைச் சேவையை வழங்குகின்றது.
TSH ஒரு பிரதேச இரத்த மாற்று நிலையமாகும். அத்துடன் மனநோய் வைத்தியம், எலும்புச் சிகிச்சை, குழந்தை வைத்தியம், நெடுங்கால நோய்களைத் தடுத்தல், புற்றுநோய் மருத்துவம் போன்றவற்றுக்கு அது பெயர் பெற்றது.
ரோறன்ரோ பல்கலைக்கழகத்துடன் இணைந்துள்ள TSH குருதிக் குழாய் அறுவைச் சிகிச்சை, இதயத்துடிப்புச் சீராக்கம், கண்சிகிச்சை போன்றவற்றுக்குப் பிற வைத்திய சாலைகளிலிருந்து நோயாளர் அனுப்பப்படும் நிலையமாகவும் விளங்குகின்றது.

ஊடகத் தொடர்பு:
David Brazeau
Director, Public Affairs, Community Relations and Telecommunications,
Rouge Valley Health System
647-294-8885 dbrazeau@rougevalley.ca;

Holly-Ann Campbell
Director, Communications and Engagement
The Scarborough Hospital,
416-438-2911, ext. 8308 hocampbell@tsh.to